[பேரவைத் தலைவர்] [2011 செப்டம்பர் 8

இந்திய மக்கள் அனைவரையும் அதிர்ச்சியில் உறையச் செய்த இக்கொடிய செயலுக்கு, இப்பேரவை கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் இதற்குக் காரணமான தீய சக்திகளைக் கண்டறிந்து, அவற்றை வேருடன் அழிக்க வேண்டுமென்று இப்பேரவை விழைகிறது.

இக்கொடிய வெடிகுண்டுச் சம்பவத்தில் தங்களுடைய இன்னுயிரை இழந்த அப்பாவிப் பொதுமக்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், படுகாயமுற்றுத் தவிப்போருக்கு ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது. இத்தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

95—

வாக்காளர் அட்டை

***2117—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாக்காளர் அட்டையினை இணைய வசதிமூலம் விண்ணப்பித்துப் பெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாக்காளர் பட்டியல், சுருக்க முறை திருத்தக் காலங்களில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி

2011 செப்டம்பர் 8]

கோரிக்கைகளும், மறுப்புரைகளும் பெறும் காலக்கட்டத்தில் மட்டும் இணையதள வசதிமூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற விண்ணப்பிக்கும் வசதி செய்து தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையதளத்தின் மூலம் வாக்காளர் அட்டை பதிவு செய்வது மிகவும் இன்றியமையாதது; மிகவும் அவசியமானது. ஏனென்றால், இணையதளத்தின் வழியாக வாக்காளர் அட்டையைப் பதிவு செய்தால் பிழைகள் இருப்பதில்லை. பாஸ்போர்ட் பெற்றுக்கொள்வதற்கு, அரசு உத்தியோகங்களுக்காக விண்ணப்பம் செய்வதற்கு, பிழைகள் இருந்தால் சரியாக இருக்காது என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; அரசு அதிகாரிகள் வீடுகளுக்குச் சென்று வாக்காளர் அட்டை பதிவு செய்தவர்களை விசாரிக்கின்றபோது உத்தியோகத்திற்குச் செல்பவர்கள் வீடுகளில் இருப்பதில்லை. அதனால், சரியாக அவர்களுடைய வாக்காளர் அட்டை பதிவு செய்வதற்கு வாய்ப்பில்லை. அதனால் பலரிடம் வாக்காளர் அட்டை இல்லை. ஆகவேதான், மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக வேண்டிக்கொள்வது இணையதளத்தின்மூலம் வாக்காளர் அட்டை பதிவு செய்வது மிகவும் அவசியம். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படாமல் விடுபட்டுள்ள வாக்காளர்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர்கள் ஆகிய அனைவருக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளைத் தயாரித்து விநியோகிப்பது என்பது தொடர்ந்து நடைபெறும் ஒரு நடைமுறையாகும். வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தக் காலங்களில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி கோரிக்கைகளும்,*

மறுப்புரைகளும் பெறும் காலக்கட்டத்தில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இணையதள வசதிமூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கின்ற வசதி செய்து தரப்படுகின்றது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டவுடன், விண்ணப்பதாரருக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும். சுருக்கமுறை இல்லாத மற்ற காலங்களில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்புகின்றவர்கள், படிவம் 6—ஐப் பூர்த்தி செய்து, அந்தந்த மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களிலுள்ள தேர்தல் அதிகாரிகளை அணுகி விண்ணப்பித்துக் கொள்ளலாம். வாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்கு வயது மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள் ஆய்வு செய்யப்பட்ட பின்னர், அவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—05

இந்தச் சுருக்கமுறை இருக்கும்போது மட்டும் இணையதள வசதி செய்து தரப்படுகிறது. மற்ற காலங்களில் படிவம் 6—ஐப் பூர்த்தி செய்து தேர்தல் அதிகாரிகளிடம் கொண்டு சேர்க்கவேண்டும். அதோடு நீங்கள் இணையதளத்தில் பதிவு செய்தாலும், இரசீதை நீங்கள் பெற்று திரும்பவும் சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலர்களிடத்திலே கொண்டு சேர்த்து, அவர் திரும்பவும் உங்கள் வீடுகளுக்கு வந்து சான்றிதழ்கள் சரியாக இருக்கின்றதா என்று சரிபார்த்து, புகைப்படத்தை வாங்கிச்சென்று, புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியலில் உங்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் அளித்திருக்கிறார்கள். அதற்குமேல் நீங்கள் என்ன கேட்க விரும்புகிறீர்கள்?

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. Now we are in an advanced stage. நாம் வளர்ந்துகொண்டேயிருக்கிறோம். சில வாக்காளர்கள்

2011 செப்டம்பர் 8]

ஊரிலேயே இருக்கமாட்டார்கள். அவர்களுடைய office–ல் சென்று காத்துக்கொண்டு இருக்கமுடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லாதவர்களுக்கு அடையாள அட்டை கொடுக்கச் சொல்கிறீர்களா?*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருக்கிறவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்றுதான் வலியுறுத்திச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது நல்ல யோசனைதான். இருந்தாலும் மற்ற காலங்களில் வாக்காளர்கள் பெயர் சேர்ப்பதற்கு இணையதளத்தின்மூலமாக வசதி செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் உரிய முறையில் அது தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Please sit down. *அதுபற்றி இப்பொழுது பேசக்கூடாது சம்பந்தப்பட்ட* demand-*ல்தான் பேசவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள்.*

திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே கொச்சியிலே பிடிபட்ட ஒருவரிடத்திலே மூன்று பாஸ்போர்ட்டுகள் இருந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. அதுபோல, போலி அடையாள அட்டைகள், போலி வாக்காளர் பட்டியல் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறதா? அல்லது போலியாக பெயர் சேர்க்கப்பட்டவர்கள் நீக்கப்பட்டு இருக்கிறார்களா? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

[2011 செப்டம்பர் 8

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது வாக்காளர் அடையாள அட்டையைப்பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கின்றோம். பாஸ்போர்ட் என்பது வேறு; சிறப்புக் கோரிக்கையின்கீழ் வருகின்றது. போலி வாக்காளர் பட்டியலைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக இந்தியத் தேர்தல் ஆணையத்தினுடைய உத்தரவினைப்பெற்று வாக்காளர் பெயர் சரிபார்க்கின்ற பணிக்கான கடமையைச் செய்கின்றபொழுது, போலி வாக்காளர்களை அடையாளம்கண்டு, போலி வாக்காளர்களை நீக்குகின்ற பணியும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

கூட்டுக் குடிநீர்

***394—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, திருமயம் பொன்னமராவதி, அரிமளம் ஆகிய ஒன்றியங்களில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமயம் தொகுதி, திருமயம், பொன்னமராவதி, அரிமளம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் காவிரிக் குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, புதுக்கோட்டை ஒன்றியத்தில் 13 குடியிருப்புகள், விராலிமலை ஒன்றியத்தில் 503 குடியிருப்புகள்,